Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தொலை பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 335

யாழ்ப்பாணம் தை 1 ஜுலை 27 சனிக்கிழமை (15-1-72)

17 JAN 1972
UNDERGRADUATE LIBRARY

எல்லோருக்கும்
எமது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
உரித்தாகுக
ஆ. வைத்திலிங்கம்
அன் கோ
(பிரபல பலசரக்கு வியாபாரிகள்)
45, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 663

# 3,500 ஆசிரியர்களுக்கு இம்மாத இறுதியில் நியமனம்

## ஒருவருட சேவையின் பின் கலாசாலையில் பயிற்சி

கொழும்பு, வெள்ளி
3,500 தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களுக்கு இம்மாத இறுதியில் கல்வி அமைச்சினால் நியமனம் வழங்கப்படும்.

இந்த ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மூன்று நாள் ஆசிரியர் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

இவர்களுக்கு மாதம் 240 ரூபா சம்பளம் வழங்கப்படும். இவர்களில் 70 வீதமானோர் விஞ்ஞான பாடங்களையே மாணவர்களுக்கு படிப்பிப்பார்கள்.

இந்த ஆசிரியர்களுக்கு ஒருவருடகால சேவை முடிந்த பின்னர் சம்பளத்துடன் ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு போய் பயிற்சி பெறுவதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுமென கல்வி அமைச்சின் ஓர் உயர்தர அதிகாரி எமது நிருபரிடம் தெரிவித்தார்.

ஜி. ஸி. ஈ. உயர்தரபரீட்சையில் குறைந்த பட்சம் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் சித்தியெய்திய வர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

## தக்காளித் தோட்டத்தின் மத்தியில் கஞ்சாச்செடி

மாவிட்டபுரம், வெள்ளி
தக்காளித் தோட்டத்தின் மத்தியில் நாட்டப் பட்டிருந்த கஞ்சாசெடியைக் கண்டு பிடித்தனர் காங்கேசன் துறைப்பொலிசார்.

காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பி. இராசேஸ்வரன், சார்ஜன்ட் பட்டிகமனை வி. செல்லையா, எஸ். ஜே. கசநாயக்கா ஆகியோர் கொண்ட பொலிஸ்கோஷ்டி ஒன்று வலாலியிலுள்ள ஒரு தக்காளித் தோட்டத்தில் சோதனை நடாத்திய சமயம் அத்தோட்டத்தின் மத்தியில் இருந்து 6 அடி உயரமுடைய பல நூறு ரூபாய் பெறுமதியுள்ள கஞ்சா செடிகளைக் கைப்பற்றினார்கள்.

இச்சம்பவம் குறித்து சந்தேகத்தின்பேரில் வலாலியைச் சேர்ந்த மூத்ததம்பி தர்மலிங்கம் என்னும் நபர் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளார்.

இந்தநபர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவிருக்கிறது.

## இன்று பீலிக்ஸ் வருகிறார்!



யாழ்ப்பாணம், சனி
பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று காலை 8-15 மணிக்கு பலாலி விமான நிலையம் வந்து சேருகிறார். அமைச்சராக பதவியேற்ற பின்னர் வடபகுதிக்கு முதல் தடவையாக விஜயம்செய்யவிருக்கும் திரு. பீலிக்சுக்கு அமோக வரவேற்பு காத்திருக்கிறது.

## பேராசிரி பி. ஏ. பத்திரம் காட்டினாராம்

கொழும்பு, வெள்ளி
போலி பி. ஏ. பட்டதாரி தராதரப்பத்திரத்தை காண்பித்து வித்தியோதய பல்கலைக்கழகத்தின் காரியதரிசியை ஏமாற்றி எம். ஏ. பரீட்சையை எழுதுவதற்கு சதி திட்டம் போட்டார்கள் என ஏ. ஏ. டொன் பி. பியரத்தின தம்பதிகள் மீது கொழும்பு தெற்கு நீதிமன்றத்தில் பொலிசாரினால் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

## தினசரி சுவீப் முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி
இன்று மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் இழுக்கப்படும் தேசிய லொத்தர்சபையின் 14-வது தினசரி அதிர்ஷ்ட சுவீப் முடிவுகள் நாளைய 'ஈழநாட்'டில் வெளிவரும்.

வாசகநேயர்கள், விளம்பரதாரர்கள்
அனைவருக்கும்
'ஈழநாடு' தனது உளம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றது.

சினிமாப்பட கூட்டுத்தாபனத்துக்கு

## டைரக்டராக தமிழர் ஒருவரும் நியமனம்?

கொழும்பு, வெள்ளி
விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் அரசாங்க சினிமாப்பட கூட்டுத் தாபனத்திற்கு தமிழர் ஒருவரும் டைரக்டராக நியமிக்கப்படலாமென அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

தற்போது இலங்கை டைரக்டர் திரு. சரத் அமுனுகமவே இக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்படவிருக்கிறார். இவர் இவ்விரு பதவிகளையும் ஏககாலத்தில் வகித்து வருவார்.

சிங்களத் திரையுலகின் தலைசிறந்த வில்லன் நடிகரான டொமி ஜயவர்த்தனா இக் கூட்டுத்தாபனத்தின் டைரக்டர்களில் ஒருவராக நியமிக்கப்படவிருக்கிறார். கடந்த பொதுத்தேர்தலின் போது சிங்களத் திரையுலகின் கலைஞர்கள் ஐக்கிய முன்னணிக்கட்சி ஆபேட்

(10-ம் பக்கம் பார்க்க)

## திருமணத்துக்குபணமில்லை! மனமுடைந்த இளைஞர் தற்கொலை

கொழும்பு, வெள்ளி
இம்மாதம் 21ந் திகதி திருமணம் நடக்கவிருந்தபோதிலும், தனது திருமணச் செலவுக்குப் பணமில்லையே என்று மனமுடைந்து 24 வயது வாலிபர் பி. ஏ. விமலசேனா என்பவர் கிருமிநாசினி உண்டு தற்கொலைசெய்து கொண்டார்.

தனது திருமணத்திற்கு வேண்டிய விலையுயர்ந்த 'சூட்' ஒன்றையும் தைத்து முடித்து, திருமண அழைப்பிதழ்களையும் அனுப்பி வைத்த பின்னரே இந்த அப்பாவி இளைஞர் தற்கொலை செய்யும் முடிவுக்கு வந்திருக்கிறார்.

கொழும்பு திடீர் மரண விசாரண அதிகாரி திரு ஈ. பீ. வீரக்கோன் முன்னிலையில் இந்த இளைஞரின் 8 வருடக் காதலியும், எதிர்கால மனைவியுமாகவிருந்தவருமான விஜேவர்த்தன என்ற 22 வயதுப் பெண் சாட்சியமளிக்கையில் விமலசேனா ஜனவரி 3ந் திகதி தன்னைப் பார்க்க வந்தார் என்றும், எனக்கு இதுவே

(10 ம் பக்கம் பார்க்க)

## பிரதமருக்கு ஆப்ரேஷன்

குணமடைகிறார்

கொழும்பு, வெள்ளி
பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு இன்று காலை அப்பெண்டிக்ஸ் ஆப்ரேஷன் செய்யப்பட்டது. இப்போது அவர் சுகமடைந்து வருகிறார். அடுத்தவாரம் வரையிலான நிகழ்ச்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன (நா)

## திருமண அழைப்பு

செல்லநாயகம் சந்திரகாசன் — நாகநாதன் நிர்மலா

செல்வன் செல்லநாயகம் சந்திரகாசனுக்கும்
செல்வி நிர்மலா நாகநாதனுக்கும்
1972 ஜனவரி 20-ந் திகதி வியாழக்கிழமை
பி.ப. 4-30 மணிக்கு கொழும்பு, வெள்ளவத்தை,
காலிவீதியிலுள்ள தென்னிந்திய திருச்சபையில்
(டச் றிபோர்ம்ட் தேவாலயம்)
திருமணம் நடைபெறும்.

மணமக்கள்
உற்றார் - உறவினர் - நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றனர்.
தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை
3379

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த பொங்கல்வாழ்த்துக்கள்!

**சாந்தி**

(சுன்னாகம்)

தினசரி 6-15, 9-30

சனி, ஞாயிறு 2-30

ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ நடித்த

**நில்! கவனி!! காதலி!!!**

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

**யாழ். தியேட்டர்**

(காங்கேசன்துறை

தினசரி 6-15, இரவு 9-30

சனி, ஞாயிறு 2-30

சிவாஜி - சாவித்திரி நடித்த

**பாசமலர்**

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும்

எமது உளம் நிறைந்த

பொங்கல் வாழ்த்துககள்!

**ராணி**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி — ஜெயலலிதா

முத்துராமன் - நாகேஷ்

நடித்த

# சவாலே சமாளி

ரஸிகப்பெருமக்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

**எஸ். ரி. ஆர்.**

**பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்**

தமது அன்பு கலந்த

**பொங்கல் வாழ்த்துக்களை**

தெரிவிக்கின்றனர்



**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

**எம். ஜி. ஆர்.**

(இருவேடங்களில்)

**ஜெயலலிதா**

**அசோகன்**

நடித்த

# நீரும் நெருப்பும்

(கலர்)

பொங்கல் பொலிவுப் பொலிவுடன் இருக்கும் பொங்கல் திருநாளில் அன்பின் ரஸிகர்கள் உமக்கு எங்கள் வாழ்த்துக்கள்!

**இப்பொழுது நடைபெறுகிறது!**

**வெலிங்டன் - லிடோ**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்



பத்மஸ்ரீ

★ சிவாஜி கணேசன்

★ பத்மினி

★ நாகேஷ் ★ தங்கவேலு

நடித்த

சிவாஜி புரடக்ஷன்ஸ்

# வியட்நாம் வீடு

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த பொங்கல்வாழ்த்துக்கள்!

REGAL (Jaffna)

Daily 5-15 & 7-15 p.m.

Sat. Sund ys 10-30

Jim Dale Joan Sims

in

THE BIG JOB

(color)

தினசரி 2-00, இரவு 10-00

ஜெமினி- வைஜந்திமாலா

ரங்காராவ்

நடித்த

**பார்த்திபன் கனவு**

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கு எமது உளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

**மனோகரா**

யாழ்ப்பாணம்

தினசரி 2-30, 6-30, 10-00

முத்துராமன்-நாகேஷ்

ராஜ்ஸ்ரீ

நடித்த

**நவக்கிரகம்**

தினசரி காலை 10-30 க்கு மட்டும்

GRAND SLAM

(Robbery film)

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்

**வெலிங்டன் சினிமா**

(மானிப்பாய்)

தினசரி 6-30, 10-00

சனி, ஞாயிறு 2-30

ஜெமினி - வாணிஸ்ரீ

நடித்த

**தபால்காரன் தங்கை**

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்

**நியூ கலிங்கன்**

இணுவில்

தினசரி 6-30, இரவு 10-00

சனி ஞாயிறு 2-30

சிவாஜி - தேவிகா

நடித்த

**நீலவானம்**

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்

**நாகம்ஸ் சினிமா**

சுன்னாகம்

காலை: 10-30, பி.ப. 2-30

மாலை: 6-30, இரவு: 9-45

எம். ஜி. ஆர். -

ராஜசுலோசனா

**நல்லவன் வாழ்வான்**

---

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3846

### விற்பனைக்கு

நல்ல பழக்கவழக்கமுள்ள உயர்தர அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு. இனவிருத்திக்காகச் சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன், 15, மலர் மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 3811

மல்லாகம் சந்திக்கருகாமையில் சகல நவீன வசதிகளுமுள்ள பெரிய வீடும் பதினேழு பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. தவமணி, 72, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம். 3861

புதுப்பித்த 22 ஸ்ரீ 9092 இலக்கமுடைய பேகுஷன்-35 மசே டிரக்டர் உழவு கலப்பையுடன் விற்பனைக்குண்டு. காலை 8 மணி தொடக்கம் பார்வையிடலாம். இராசவாசா, வடடு கிழக்கு வட்டுக்கோட்டை. 3884

சொந்தப் பாவிப்பிலுள்ள B. S. A. பென்ரம் மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- க. பாலசிங்கம் சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் 3887

IC 3246 ஒஸ்ரின் 3 1/2 தொன் நிறை லொறி விற்பனைக்குண்டு. 9, மொடேண் மோட்டோஸ் கலைப்புலவர் வீதியில் பார்வையிடலாம். கூடுதலான விலை கோருபவருக்கு முதலிடம், தொடர்புகொள்ளவும்:- மெஹியா மோட்டோஸ் அன் பிறின்ஸ் கம்பனி, இரத்தினபுரி, தொலைபேசி: 411 3885

### வைத்தியம்

ஆலோசனை இலவசம். பல் கட்டுதல் அரைச் செட் Rs 150/-. சிங்கப்பூர் பல் கட்டுமிடம், A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம். 2ம் மாடி ஆஸ்பத்திரி வீதி - பெரிய கடை, யாழ்ப்பாணம். 3869

வாதம், சொத்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம். (D.A.M.) தங்க பாலரன் வைத்தியசாலை, இராசவீதி, நல்லூர் மார்க்கெட் யாழ்ப்பாணம். 3817

### கல்வி

1972 மார்கழி க.பொ.த. [சா] பரீட்சை ஆங்கில வகுப்புகள் பொங்கலின் பின் ஆரம்பமாகும். பெயர்களைப் பதிவு செய்யவும். V. V. இராசரத்தினம் B.A. (Lond) Dip. Ed. 44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3875

G C E. (A. L.) சோதி தராதரப்பத்திர (உயர்தர) கலை, வர்த்தக வகுப்புக்களும், சமையல், தையல் வகுப்புக்களும் 17-1-72 இல் ஆரம்பமாகும். ஏனைய வகுப்புகள் நடைபெறத் தொடங்கிவிட்டன. பெண்களுக்கும் விடுதி வசதியுண்டு. யாழ்ப்பாணக்கல்வி நிலையம், 304/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3872

ஆரம்ப வகுப்புகள், ஜி. சி. ஈ., அரசாங்க ஊழியர்களுக்கான சகல பரீட்சைகளுக்கும் தபால் மூலம் சிங்களம் கற்பிக்கப்படும். வெற்றிவேல் போதனா நிலையம் (தபால் மூலம் கல்விப் பகுதி) கொக்குவில் மேற்கு, கொக்குவில். 3888

ஆங்கில விசேட வகுப்புகள் க.பொ.த. (சாதாரண) 9-ம் தர மாணவிகளுக்கு மாலை 3-45 க்கு உண்டு. றிம்மர் கல்வி நிலையம், வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 3880

### தேவை

பெருந்தொகையாக மரவள்ளிக்கிழங்கு தேவை. விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி. 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 541. 3845

கடதாசிப் பொருட்கள் உற்பத்தி செய்யும் ஸ்தாபனத்தில் 20 வயதிற்கு உட்பட்ட ஜே. எஸ். சி. தமிழ்/ஆங்கிலம் சித்தியெய்திய ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேலை பழகும் வெற்றிடம் உண்டு. 21-1-72 க்கு முன் முழு விபரங்களடங்கிய விண்ணப்பம் அனுப்ப வேண்டும். சி. ஆர். எஸ், என்டர்பிறைசஸ், 390, 392 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 3879

### வசியம்

வாழ்க்கையில் இஷ்டமிடும் காரியங்களை நிறைவேற்றுவதற்கு மட்டக்களப்பு மாந்திரிக வசியம் செய்து அனுப்பப்படும். பெயர் விபரங்களுடன் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். ரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. ஏ. எஸ். குட்டி, 57, சென்றல் ரோட், மட்டக்களப்பு. 3886

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த

**பொங்கல் வாழ்த்துக்கள்!**

இன்று முதல்

**வின்ஸர்—யாழ்ப்பாணம்** தினசரி 4 காட்சிகள்

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

(இரு வேடங்களில்)

★ ராஜ்ஸ்ரீ ★ நம்பியார்

★ நாகேஷ் ★ சுந்தரராஜன்

மற்றும் பலர் நடித்த

ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

# குடியிருந்த கோயில்

(புத்தம் புதிய கொப்பி)

அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
உரித்தாகுக!
தங்க, வைர
நகைவியாபாரிகள்
பொ. அம்பலவாணர்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7199.

# ஈழநாடு
EELA NADU
## பொங்கல் சிறப்பிதழ்

எல்லோர்க்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!

புத்துணர்ச்சிக்கும்
உற்சாகத்திற்கும்
பாவியுங்கள்
அண்ணா
கோப்பி
அண்ணா இன்டஸ்றி
இணுவில்.

# உழவர் பெருமக்களின் எழுச்சி விழா

— க. குருநாதன் —

தைப்பொங்கல் தமிழர்களின் தனிப்பெருந் திருநாளாகும். சிறப்பாக உழவர்கள் நிலமாகிய இயற்கை அன்னையும் செங்கதிரோனும் ஒருமித்து தமக்கும் தங்களைச் சார்ந்த ஜீவராசிகட்கும் வழங்கும் தானியங்கள் மற்றும் உணவு வகைகட்கென நன்றியுணர்வுடன் விழாவாகக் கொண்டாடும் தினமே இது. சில மேற்றிய நாடுகளிலும் தானிய அறுவடையின்பொழுது இப்படிக் கேளிக்கையாக விழாக் கொண்டாடும் வழக்கமுண்டெனினும் நாம் இப்பொங்கற்பண்டிகையைச் சமயசாரத்துடன் தைத்திங்களில் கொண்டாடுகிறோம். இப்பண்டிகையின்பொழுது உழவுத்தொழிலில் ஈடுபட்டவர்கள் தமது வாழ்க்கையின் செழுமைக்குப் பெரிதும் உதவும் சூரியனுக்கு யாவரும் உயர்வு தாழ்வின்றி ஒரே இன மக்கள் என்ற ரீதியில் பொங்கி வழிபாடு இயற்றுவர்.

வானம் பொய்க்காமல் பயிர் இனங்கட்குத் தேவையான மழையை அருளிப்பதுடன் அவைகட்கு அத்தியாவசியமான சூரியகிரணங்களைப் பாய்ச்சி அவைகளைச் செழிப்பாக வளரச்செய்வதினாலும் மற்றக் காரணங்களினாலும் ஆதித்தனை ஒரு பிரத்தியட்ச தெய்வமாக - சூரிய நாராயணனாக எமது முன்னோர் கருதிவருவாராயினர். மேலும் இப்பொங்கற்தினம் கார், கதிர் காலங்கள் முடிவடைந்து அடுத்ததாகவரும் தைமாதம் முதலாம் நாளில் வருகின்றது. இதன்பின் வருவதாகிய காலம் உழவர்கட்கு வயல்களில் விளைந்த நெல்லை அறுவடை செய்யவும் மற்றும் தானியங்கள் பயிர்வகைகளினால் மிகுந்த பலனடையவும் உரியகாலமாகும். இதற்குத் துணை செய்யும் சூரியனைப் பழந்தமிழ்ச் சமுதாயத்தினர் வாழையடி வாழையெனத் தை முதல்நாளில் பொங்கி வழிபடும் வழக்கத்தைக் கைக்கொண்டு வருவாராயினர். இப்பாரம்பரியத்தைப் பின்பற்றி நாமும் இயற்கை அன்னைக்கு நமது நன்றிப் பிரதிபலிப்பாக விழாவெடுத்து வருகின்றோம்.

உழவுத்தொழிலின் சிறப்பைப்பற்றி நாம் இங்கு எடுத்தியம்ப வேண்டியதில்லை. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்று வள்ளுவரும் 'உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லைக் கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்று ஒளவையும் பாடியுள்ளனர்.

உலகின் ஜனத்தொகை பல்கிப் பெருகிவரும் இன்றைய நிலைக்கு உழுதுண்டு வாழும் வேளாண்மைத் துறைக்குக் கூடிய கவனம் செலுத்தவும் புதியவைகளும் நவீனதுமான முறைகளைக் கையாண்டு உணவுற்பத்தியைப் பெருக்கவும் பல நாடுகளும் முயற்சியெடுக்கின்றன. மேலைநாடுகளில் யந்திரசாதனங்களின் உதவியால் குறுகிய காலத்தில் சிறந்ததும் கூடியதுமான உற்பத்தி இலக்கையடைவதிலும் பாரிய பண்ணைகள் நடத்துவதிலும் அக்கறையுள்ளவர்கள் கவனம் எடுக்கின்றனர். ஆயினும் மேற்கூறப்பட்ட வசதிகளெதுவும் அற்று பொருளாதாரத் துறையில் பின்தங்கிநிற்பினும் உள்ள மூலதனத்தையும் நிலப்பரப்பையும் வளத்தையும் கொண்டே மிகச்சிறிய முறையில் விவசாயத்தில் ஈடுபடுகின்றார்கள் நம்மவர்கள்.

எமது நல்வாழ்வுக்கு எவை ஆதாரமானவைகளோ அவைகளை நாம் காலங்காலமாகக் கைக்கொண்டே வருகின்றோம். இத்தகைமைத் தானதே நாம் கொண்டாடி வரும் பொங்கல்பண்டிகையும்.

இத்தோடு போகிப்பண்டிகையென்றும் பட்டிப்பொங்கலென்றும் சிலர் கொண்டாடும் வழக்கமும் உண்டு. எம்முன்னோர் நிலத்தின் இயல்பைக்கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பிரித்திருந்தனர். இதில் மருத நிலம் வயலும் வயலைச் சார்ந்த பிரதேசமாகும். மருத நிலத்திற்குரிய வழிபடு தெய்வமாக இந்திரனையும் கொள்வாராயினர். அத்தெய்வத்திற்குரிய பொங்கல் வழிபாட்டு முறையையே போகிப் பண்டிகை என்பர் இது தைப்பொங்கலின் முதல்நாள் கொண்டாடப்படும். இன்னும் பட்டிப் பொங்கலை மூன்றாம் நாள் கொண்டாடுவார்கள். அன்றைக்கு உழவர்கள் தமது விவசாயத் தொழிலுக்கு உறுதுணையாக இருந்த பசுக்கள், காளைகள் யாவற்றையும் குளிப்பாட்டி அவைகளை அலங்கரித்து, அன்று மாலையில் பொங்கல்செய்து அவைகட்கு உணவளித்து மகிழ்வார்கள். அதேசமயம் போகிப் பண்டிகை, பட்டிப் பொங்கல் ஆகிய இரண்டும் இக்காலத்தில் அருகிவருகின்றன.

எனினும் பொங்கற் பண்டிகை அதேமாதிரி எல்லாத் தமிழ்கூறும் இந்து சமயத்தவர்களினதும் இல்லத்தில் நடைபெறுவதாகும். இத்தகைய பொங்கற் பெருநாளைச் சிறியவர் முதியவர், ஆண், பெண் என்ற பேதமின்றி உற்சாகத்துடன் கொண்டாடுவரெனும் இதில் பன்மடங்கு மகிழ்ச்சி உண்மையான கடும் உழைப்பாளிகளான உழவுத் தொழிலா

(9-ம் பக்கம் பார்க்க)

## தைப்பெண் எழுந்து வருகிருள்

புன்னகை பூத்து வருகிருள் — இன்பம்
பொங்கிப் பொலிய வருகிருள் — இன்று
தன்னை எங்கணும் சிந்திபே — தமிழ்[த்]
தைப்பெண் எழுந்து வருகிருள்.

ஏழை உழவர்கள் பானையில் — புதி
தேற்றிப் புதுப்பொங்கல் செய்கிருர் - இதை
பானைச் சிரிப்புட ஞரவன் — நின்று
பார்த்திட வானில் வருகிருள்.

— கரவைச் செழியன்.

## தைப்பெண் பிறந்த நன்ருள்

தைமகள் பிறந்த நன்ருள்
தமிழர்கள் பெற்ற பொன்ருள்
அமுதினும் இனிய பொங்கல்
ஆக்கிடும் இன்பத் திருநாள்

நாள்தோறும் உழைத் துழைத்து
நாட்டினில் வறுமை நீக்கும்
உழவரின் பெருமை தன்னை
உலகினுக் குணர்த்தும் இன்ருள்.

— க. பாலசுப்பிரமணியம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
பொங்கல் வாழ்த்துக்கள்
சிறந்த முறையில் உத்தரவாதத்துடன்
உங்கள்
டயர்களைப் புதுப்பிப்பதற்கு
சிறந்த இடம்
நோர்தேண் இன்டஸ்றீஸ்
8/1 ஸ்ரான்லி வீதி தொலைபேசி: 7158 யாழ்ப்பாணம்.


எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

கண்ணையும்...கருத்தையும்
கவரும்
தங்க-வைர நகைகளை
தெரிவுசெய்ய
சிறந்த ஸ்தாபனம்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகைமாளிகை
கன்னாதிட்டி, [போன்: 585] யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
ஞானம்ஸ் ஸ்ரூடியோ
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(போன்: 7067)
ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

அன்பர்களுக்கும் — ஆதரவாளர்களுக்கும்
எமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
ஹரன் ஜுவலர்ஸ்
(பிரபல நகை வியாபாரிகள்)
(R. G. பில்டிங்)
50, கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
நீடித்த
உழைப்பதில்
நிகரேதும்
இல்லாத




யூ ஆசா
பற்றறிகளே.
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்!
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம்.
கிளை: கண்டிரோட் — பரந்தன்.

இரு அலை வேண்ட்
ஸோனி
SONY
8 R - 24MS
சிறந்த, மத்திய அலை ஆகியவற்றுடன் மிக நேர்த்தியான ஒலி அமைப்பிற்கு வானபுவி ஈர்ப்புசக்தியின் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டது. நான்கு டோர்ச் பாட்டரிகளில் இயங்குவது.
ரூ. 325/-
சிடில்ஸ் சினே ரேடியோ
9-10, கொள்சிஸ்டரி கட்டிடம்,
பூந்தோட்ட வீதி, கொழும்பு-11. தொலைபேசி: 27311
கிளைகள்: கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, பம்பலப்பிட்டி.

உலகில்



ரேடியோக்கள்
வாங்கவோ விற்கவோ அல்லது திருத்தவோ
யாழ்ப்பாணத்தில் முதன்மை ஸ்தாபனம்
எஸ். சுலேமான்கண்டு
அன் பிறதர்
5 & 7, மொம்சாக் கட்டிடம்,
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 265 தந்தி: 'ஜஹான்'

யாழ்ப்பாணத்தில்
'யுனிக்' ரேடியோ விநியோகஸ்தர்களான
V.K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்
தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் தமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்.
V.K. இராசரத்தினம்
பிரபல
ரேடியோ விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்
95, ஸ்ரான்லி ரோட்: யாழ்ப்பாணம். போன்: 7147

# யாழ். நகர் அழகாபுரித் திட்டம் இவ்வாண்டு ஆரம்பிக்கப்படும்

## பொங்கல் தினத்தில் வரியிறுப்பாளருக்கு மேயர் தரும் தித்திக்கும் செய்தி

யாழ். நகர வரியிறுப்பாளருக்கு நகர முதல்வர் திரு அல்பிரட் தி துரையப்பா விடுத்துள்ள பொங்கல் செய்தி கீழே தரப்படுகிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் யாவருக்கும், சிறப்பாக யாழ். நகர மக்களுக்கும் எமது புத்தாண்டுப் பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண வரியிறுப்பாளர் செவிக்குத் தேனை இனிக்கும் பின்வரும் செய்தியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

யாழ் நகரை அழகாபுரியாக்குவதென நான் முற்கனவே கொடுத்துள்ள உத்தரவாதத்தை இவ்வாண்டில் நான் தானே செயல்படுத்த முனைவேன். அதனை ஈடேற்றுவதற்கான எமது உத்தேசம் ஒரு திட்டமாக உருவாக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்படும்.

ரோமாபுரி ஒரே நாளில் அமைக்கப்படவில்லை. யாழ் நகரை அழகாபுரியாக்குவதென்ற எமது உத்தரவாதமும் இந்த ஆண்டிலோ அல்லது அடுத்துவரும் ஆண்டிலோ முழுமை பெறுமென எதிர்நோக்காது திட்டம் வெகுவிரைவிலே நிறைவுபெற எம்மால் இந்த ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்படும் வேலைகள் இடையீடு இல்லாது தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்பட்டுப் பார்த்துக்கொள்ளவேண்டிய பாரிய பொறுப்பு வரியிறுப்பாளர்களுடையதே.

யாழ்ப்பாண மாநகரை அழகாபுரியாக்கும் எமது எண்ணம் கருவிலே மறைந்து போகாதிருக்கச் செயல் உருக்கொடுக்க வேண்டியவர்களும் நீங்களே. அதில் வரியிறுப்பாளர்களான உங்கள் பங்கும், பொறுப்பும் கணிசமானது. உங்கள் மேலான ஒத்துழைப்பு இல்லாது எதுவும் நடைபெறமுடியாது. மாநகர சபைக்கு நீங்கள் செலுத்தவேண்டிய கட்டணங்கள், வரிகளை உடனுக்குடன் செலுத்துவதுடன், நிலுவைகளை வளர்க்காதிருக்கவேண்டியதும் உங்கள் பொறுப்பு. நகரை அழகாபுரியாக்கும் திட்டம் முதலில் உத்தேச நிலையில் நன்கு அலசி ஆராயப்படும். திட்டம் ஒருவாறு செயல் உருவிற்குக் கொண்டுவரப்பட்டதும், பின்னோக்கித் திரும்பிப் பார்க்க அல்லது படிப்படியாக முன்னேறிச் செல்வதற்கு பதிலாக பின்வாங்குகிற போக்கை

யாழ். நகரமக்கள் கைவிட்டுவிடவேண்டும். பழையன கழிந்து புதியன பொலிய வேண்டிய பொற்காலமாகத் திங்கள் எம்மை எதிர்கொண்டு அழைக்கிறது. எனவே, எதிர்வரும் ஆண்டில் நான் எடுக்கப்போகும் சில நடவடிக்கைகளை சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

### வரவேற்கத் தயாராவோம்

நான்காவது அனைத்துலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. மாநாடு சிறப்புற நடைபெறப் பார்த்துக்கொள்ள வேண்டியது மன்றத்தின் தலையாய கடமையாகிறது. மாநாட்டிற்கு இலட்சக்கணக்கான தமிழ் அன்பர்கள் வருவார்கள் என்பதோடு, வெளிநாடுகளிலிருந்தும் அறிஞர்கள் உட்படப் பார்வையாளர் பலரும் வருகை தரக்கூடும். அவர்களையெல்லாம் எதிர்கொண்டு வரவேற்பதற்கு யாழ். நகர் தயாராகவேண்டும். நகர் இந்திர விழாக்கோலம் பூணவேண்டுமென்றும் உறுதிசெய்வோம்.

உல்லாசப் பிரயாணிகளின் வருகையால் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்க ஆரசும் பாடுபடுகிறது. இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் அறிஞர், பார்வையாளர்களுக்கு ஏதுவிடுதியகங்கள் திருப்திதரும் வகையில் நவீன வசதிகள் செளகரியங்களைச் செய்துகொடுக்க மன்றம் பார்த்துக்கொள்ளும். இது விஷயத்தில் தேசிய மனப்போக்குடன் நடந்துகொள்ளும்படி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கு கிடைக்கும் நற்பெயரால் அவர்களது தொழில் வளர்ச்சியடையும்படி நாட்டுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் பலர் வடபகுதிக்குவர ஏவப்படுவார்கள்.

### நகரப் பாதுகாப்பு அணி

நகரப் பாதுகாப்பு அணி அமைத்து, மன்றத்துக்குப் பண விரயமின்றிச் சிரமதானங்கள் மூலம் நகரைச் சிறமைக்க முயலுவேன்! வெளிநாடுகள் வீதிகளைத் துப்பரவாக வைத்திருப்பதற்கு இம்முறையைப் பயன்படுத்துகின்றன. வனி காலத்தில் அவரவர் வீடுகளுக்கு முன்னுள்ள பனிக்கட்டிகளை அவரவர்களே அப்புறப்படுத்த உதவவேண்டுமென்பதோடு அவன் முன் நேரிடக்கூடிய

வீதி விபத்துக்களுக்கும் அவர்களே பொறுப்பாக்கப்பட்டு வருவதை இங்கு சுட்டுதல் பொருத்தமாகும். அந்தகைய கண்டிப்பான முறைகளைப் பயன்படுத்துவதிலும் பொதுமக்கள் ஒத்துழைப்பே பெரிதும் விரும்பப்படும். வீட்டுக் குப்பைகளைத் தெருக்களில், வடிகான்களில் கொட்டுவோர் பேரிலும், மாநகரசபை ஏற்படுத்தித் தரும் சேவைகளை வீணே அவமாக்குவோர் பேரிலும், மாநகரசபை விருப்பின்றி சட்டமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படும்.

எமது நகரில் நல்ல வசதியுள்ள கடற்கரை கிடையாதெனப் பலரும் குறைகூறுகிறார்கள். நாவாந்துறையில் ஆரம்பித்து கொழும்புத்துறைவரை நீண்டதோர் கடற்கரை யாழ். நகரில் உண்டு. கடலோடு செல்லும் வீதியைச் செப்பனிட்டு விசாலித்து பாதரச ஆவிவிளக்குகளை ஏற்படுத்துவதன் மூலம் கடற்கரை வீதி முழுமையையும் ஒளிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன் அரசாங்கத்தின் மூலம் பண்ணைப் பாலத்தையும் ஒளிமயமாக்கவுள்ளேன். இப்பாலம் ஒளிமயமாக்கப்பட்டதும், அலுப்பாந்திக் கடற்கரையில் இருந்து வண்ணார்க்கு சூரிய அஸ்தமனக் காட்சியின் வனப்பும் அதையடுத்து ஒளிமயமாக்கப்பட்ட தெருவும் அதில் ஊரும் வார்திகளின் பாங்கும் கண்களுக்கு விருந்தாக அமையும்.

### வீடமைப்புத்திட்டமும் மின்சார சீரமைப்பும்

குருநகர்ப் பகுதியின் பழைய மரக்காலை இருந்த இடத்தில் மூன்று இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா செலவில் அரசாங்கம் ஒரு வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிக்கும்.

நகர மின்சார சேவைகளை நீடிப்பதற்கும், விநியோக முறைகளைச் சீரமைத்து வலுப்படுத்தவும் எதிர்வரும் ஆண்டில் உள்ளிப்பாகக் கவனம் செலுத்தப்படும். கன்னாதிட்டி, நல்லூர், குருநகர், நாவாந்துறை ஆகிய இடங்களில் விரைவில் புதிய உப மின் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

### நவீன சந்தை

யாழ். நகர் நவீன சந்தையின் முதலாவது கட்டம் பூர்த்தியடைகிறது. வருட ஆரம்பத்தில் அது திறந்து வைக்கப்பட்டதும், ஏனைய கட்டங்களையும் அமைப்பதற்கு அடுத்த ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்படும். இத்திட்டத்திற்கு அரசாங்கம் மேலும் இரண்டரை இலட்சம் ரூபா கடன் வழங்கியுள்ளது.

நீர் விநியோகத் திட்டத்தின் 2வது கட்டவேலைகளை ஆரம்பிப்பதற்கும் மேற்கொண்டு கடன் கிடைக்கப்பெற்றுள்ளது.

### நவீன பஸ் நிலையம்

இ. போ. சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி இரண்டரை இலட்சம் ரூபா பணச் செலவில் ஒரு நவீன மாதிரி பஸ் நிலையம் அமைக்

கும் அவர்களது ... திற்கு ... டிருந்த ... தீர்த்து ... மன்றத்துக்கு ... சகல தொ... கள் செலுத்தி... பஸ் நிலையம் அ... வேண்டப்படும் ... மன்றத்திற்கு ...

(10-ம் பக்கம் ...)

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப...

(15-1-72)

(செய்திகள் ... இரவு 9-00) ... காலை 6-00 ... 6-30 ... 6-50 ... 7-05 ... 7-30 ... 8-15 ... 8-30 ... 11-00 ... இரவு 6-15 ... 7-00 ... 7-35 ... 8 ... 9 ... 10-00 ...

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
ஈஸ்வர் கோப்பறேசன்
அன்
றேடியோனிக்
(பிரபல றேடியோ உப-உறுப்பு இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்)
18, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7308



நக்கு

ங்கை
பரப்புக்
தாபனம்
(1-72) சனி


# பொங்கல்

# தினசரி அதிர்ஷ்டம்!

# சீட்டிழுப்பு

# 1972 ஜனவரி 15

## யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது !

**14வது "தினசரி அதிர்ஷ்டம்" சீட்டிழுப்பு**

**இம்மாதம்**

**15-ந் திகதி சனிக்கிழமை இரவு 7-00 மணிக்கு**

## யாழ். திறந்த வெளியரங்கில்

## நடைபெறும்.

# திரண்டு வாருங்கள்!

**சீட்டிழுப்பைத் தொடர்ந்து**

**பலவித இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசீய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

# பொங்கலோ பொங்கல்

## பொங்கல் கதை

க. தங்கம்

தைப் பொங்கலுக்கு இன்னும் சில நாட்களே இருந்தன. யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளையும் போலவே உமாவும், சுமதியும், முரளியும் தைப்பொங்கல் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். புதிய சட்டைகளும் இனிப்புப் பண்டங்களும் கிடைக்குமென்பது மட்டுமல்ல, கொழும்பிலிருக்கும் அவர்களின் மாமா, பிள்ளைகளுடன் விஜயம் செய்யப் போகிறார் என்பதும்தான் காரணம்.

மாமாவின் மகன் அர்ச்சுனனுக்கு முன் எப்படியாவது பட்டாசு வெடித்துக் காட்டவேண்டும் என்ற முடிவுக்கு முரளீதரன் வந்திருந்தான். கையில் ஐந்து ரூபாயுடன் சென்றவன் வீடு வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாய் அம்மா என்று கூவிக்கொண்டே அம்மாவைத்தேடி ஓடினான்.

அடுப்பங்கரையில் ஏதோ வேலை செய்துகொண்டிருந்த மங்களம், மகனின் கூப்பாடு கேட்டுத்திரும்பிப் பார்த்தாள்.

"அம்மா, எப்படி நான் வாங்கிவந்த பட்டாசு"- தாயிடம் பட்டாசுக்கட்டுகளைக் காட்டி ஆனந்தத்தால் குதித்தான் முரளீதரன். முரளியுடன் உமாவும் சுமதியும் சேர்ந்து கொண்டனர்.

குழந்தைகள் மூவரும் மாமா, மாமி பிள்ளைகளின் வருகையையும் எதிர்நோக்கிக் காத்திருந்தனர். அன்று இரவு மெயில்வண்டியில் எதுவிதமும் மாமாவும் மாமியும் பிள்ளைகளும் வந்துவிடுவார்கள் என்று நினைத்துப் பூரித்திருந்த முரளிக்கு இரவு பத்துமணிக்கு ரயிலும் வந்து போனபின்பு துக்கம் தொண்டையை அடைத்தது. 'சில சமயம் மாமா வராமலே விட்டுவிடுவாரா?' அவன் தன்னுக்குள்ளே கேட்டுக்கேட்டு விம்மிக் கொண்டே தூங்கியும் விட்டான்.

மறுநாள் காலை நித்திரை விட்டு எழுந்த முரளி "அம்மா... மாமா இன்னும் வரவில்லையே... எல்லா வீட்டிலும் பட்டாசு வெடிக்கிறது. எங்கள் வீட்டிலே மட்டும் பட்டாசு வெடிக்க வழியில்லையே... மாமா வரவே மாட்டாராம்மா" என்று அழாக்குறையாகக் கேட்டான்.

'மாமா மாமி எப்பவருவாங்களாம்?' - உமாவும் சுமதியும் வேறு கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள்.

'உமா சுமதி, முரளி நீங்கள் எல்லாம் போய்க்குளித்து விட்டு வாங்கோ. புதுச் சட்டை புதுக்காற்சட்டை போட்டுக்கொண்டு எல்லோருமாகச் சேர்ந்து பொங்கல் கட்டி வைப்போம். மாமாவும் மாமியும் பொங்கல் சாப்பிடவந்தேவிடுவார்கள். மாமா மாமி மைத்துனன் எல்லோருக்கும் முன்பாக நல்ல அழகாயிருக்கவேண்டாமா? பொங்கல் போய்ச் சீக்கிரம் குளித்திட்டு வாருங்கள்."

'அம்மா காலை ரயிலும் போய்விட்டதம்மா. இனி மேல் மாமா எந்த ரயிலில் வரப்போகிறார்.'- முரளி சிணுங்கினான்.

'என் கண்ணல்ல, முரளி தைப்பொங்கல் நாளும் நல்ல நாளுமாய்ப்பார்த்து இப்படி 'உம்' மென்று மூஞ்சியை வைச்சிருக்காதே. மாமா 'பிளேனில்' கூட வர முடியுமடா. நினைத்தால் அவர்கள் இப்பவே வந்து குதித்தாலும் குதித்து விடுவார்கள். போடா கண்ணே, போய்ச் சீக்கிரம் குளித்து விட்டுப் புதுக்காற்சட்டை போட்டுக்கொண்டு புதுச் சட்டையும் போட்டுக் கொண்டு ஓடிவாடா எங்கே பார்ப்போம், யார் முதலில் குளிப்பதென்று. உம், உமா, சுமதி, முரளி"!

அம்மாவின் போட்டிப்பந்தயத்தை ஏற்றுக்கொண்டு மூவரும் ஓடினார்கள் - குளியலறைக்கு. மங்களம் சிரித்துக் கொண்டே தானும் நீராடி மஞ்சள் நீர் தெளித்து புத்தாடை புனைந்து பொங்கல் உலை ஏற்றினாள். அதற்கிடையில் குளித்து முடித்து புத்தாடைகள் அணிந்து கொண்ட குழந்தைகள் மூவரும் கண்ணாடி முன் நின்று தங்கள் அழகை ரசித்து ரசித்து ஆனந்தக் கூத்தாடினார்கள்.

"உமா சுமதி முரளி... ஓடி வாங்கோ, பால் பொங்கப் போகிறது"- அம்மாவின் குரல்கேட்டு அடித்துப் பிடித்து ஓடினார்கள் பிள்ளைகள்.

'முரளி பட்டாசைக் கொண்டுவந்து கொளுத்திப் போடடா கண்ணே'

'அம்மா... என்ன இது... நான் மாட்டேன் மாமா வந்த பின்புதான் நான் பட்டாசு கொளுத்துவேன்'

'மாமா... மாமா... மாமா! எப்பபார்த்தாலும் மாமாப் பாட்டுத்தான். அவர்கள் தான் பொங்கல்கொண்டாட வரவே மாட்டார்களே?'— சுமதி கீச்சிட்டாள்.

'ஊஹூம் நான் நம்பமாட்டேன். மாமா மாமி கட்டாயம் மாலை ரயிலில்தான் வருவார்கள்' உமா சொன்னாள்.

'முரளி நீ கவலைப்படாதேயடா அவர்கள் கட்டாயம் பொங்கல் சாப்பிட வந்தேயாவார்கள்' என்று மகனுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லிக் கொண்டே, 'என் கண்ணல்ல... பால் பொங்கிவழியப் போகிறது ஓடிப்போய் பட்டாசைக் கொண்டு வந்து கொளுத்திப் போடடா' என்றாள் மங்களம்.

அம்மா... நான் மாட்டேன் மாமா வந்த பின்புதான் கொளுத்துவேன்'

'போடா மடப்பயலே பொங்கலுக்கில்லாத பட்டாசு பிறகெதுக்கடா'

முரளி விம்மிக்கொண்டே சொன்னான். 'இப்போதே பட்டாசுகளைக் கொளுத்தி விட்டு மாமா வந்த பின்பு தான் என்னத்தைக் கொளுத்துவேன் அம்மா.'

'மாமா வந்ததும் கொளுத்த நான் நிறைய வாங்கித் தாறேன்டா'

'மங்களம் நீ வாங்கத் தேவையில்லை. இதோ நானே முரளிக்கு நிறைய வாங்கி வந்திட்டேனே'

திடும்பிரவேசமாய் வந்த மாமாவின் குரலைக் கேட்டு முரளி ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தான்.

எங்கே நீங்கள் பொங்கல் கொண்டாட வராமல் இருந்திடுவீர்களோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன் அண்ணா நல்ல சமயம் என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள். இங்கு முரளி ஒரே அழுகை தான் உமாவும்சுமதியும் வேறு. அப்பப்பா இவர்களைச் சமாதானப்படுத்தப் பட்ட பாடு நான், போதும் போதும் என்றாகிவிட்டது"

"மங்களம், பேச்செல்லாம் அப்புறம் இருக்கட்டும். முதலில் பொங்கல் வேலையைக் கவனி".

—அண்ணனின் அன்புக் கட்டளை.

"பால் பொங்குது, பால் பொங்குது. பட்டாசு வெடிக்கட்டும்......... முரளீ, முரளீ... பட்டாசைக் கொளுத்தடா!"

"படீபடாபடீ படாபடாபடீ படாபடாபடீ படாபடா படீ......"

மத்தாப்பு. வெடிகளின் சத்தம் காதைத் துளைத்தது. அர்ச்சுனனும் முரளியும் சேர்ந்து பட்டாசு கொளுத்தும் வேடிக்கையைப் பார்த்தபடியே அண்ணனும் தங்கையும் மகிழ்ச்சியில் திளைத்தார்கள். சுமதியும் உமாவும் குதித்து குதித்துப் பாடுகிறார்கள்!

"பொங்கலோ பொங்கல் புத்தாண்டுப் பொங்கல் பொங்கி வழியுதம்மா பொங்கி வழியுதம்மா".


வெள்ளை ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் பரிபூரண வெண்மையை அடையமுடியாது.
உங்களுக்குத் தேவையானது றெபின் நீலம்!




சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனால் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றெபின் நீலம் தேவை.

றெபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனால் முடிவில் றெபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

ஆடைகள் வெண்மையாகப் பளபளப் பாகப் பிரகாசிக்க றெபின் நீலம் பாவியுங்கள்

ஓர் றெக்கிட் அண்ட் கோல்மன் தயாரிப்பு

GRANT



எல்லோருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்



நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ்

[பிரபல இசைக்கருவி விற்பனையாளர்களும் பழுது பார்ப்பவர்களும்]

23, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

# கரும்பின் வரலாறு

— பேராசிரியர் எம் ஆர் பாலகிருஷ்ணன் —

[பொங்கல் என்றாலே நாவெல்லாம் இனிக்கிறதல்லவா? இதுதான் சர்க்கரையின் சக்தி. சர்க்கரை இல்லாமலும் ஒரு பொங்கலா? பொங்கல் விழாவில் இப்படி முக்கிய பங்கு வகிக்கும் சர்க்கரையும் அன்றாடம் நம்வாழ்வுடன் இணைந்துவிட்ட சீனியும் கரும்பிலிருந்து பெறப்படுவது யாவருமறிந்த உண்மை. ஆனால் அந்தக் கரும்பின் வரலாறு பலருக்கும் தெரியாது. கரும்பின் வரலாற்றை இனிக்கக் கூறுகிறது இக்கட்டுரை]

கரும்பின் ஆதிஉற்பத்தி ஸ்தானம், பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள பாலினேஷியா என்று கூறப்படும் தீவுகள். இன்றும் இத்தீவுகளில் பலவித கரும்பு ரகங்கள் காட்டுச் செடியாக வளர்கின்றன. தற்காலத்தில் மனிதனால் உலகெங்கும் சாகுபடி செய்யப்பட்டுவரும் கரும்பு ரகங்கள் பாலினேஷியாவில் ஆதிகாலத்தில் தோன்றிய ரகங்களின் சந்ததிகள் என்று கூறுவதற்குத் தக்க விஞ்ஞான சான்றுகள் உண்டு. பாலினேஷியாவில் தோன்றி உலகமெங்கும் பரவியுள்ள செங் கரும்பு ஆனால் முதலில் கரும்பு பயிராகச் சாகுபடி செய்யப்பட்ட தேசம் இந்தியாவாகும். காட்டில் இயற்கையாக வளர்ந்த ரகங்களை, மனித உபயோகத்திற்காக மற்றப் பயிர்கள் போல முதன்முதலில் வளர்த்து, அதைப் பண்படுத்திய பெருமை பாரத நாட்டிற்கே சேரும். வேதங்களிலும் புராணங்களிலும் காணப்படும் சொற்களையும் பதங்களையும் கொண்டு கரும்பு சாகுபடி கிட்டத்தட்ட கி.மு 2000லிருந்தே இந்தியாவில் நடைபெற்றது என்று யூகிக்க இடமுண்டு. சர்க்கரை என்னும் பதம் ஆதியில் வடமொழி வார்த்தையாகிய ஸர்க்கரா என்னும் பொடிமணல் என்று பொருள். இதைத்தவிர [illegible] என்றுபெயர் அதிலிருந்துதான் [illegible] ரோஸ் என்னும் ஆங்கிலப் பதம் வந்தது. ஸர்க்காரா என்னும் பதம் தோன்று முன்னமேயே கண்டா (Khanda) என்னும் பதம் சர்க்கரையைக் குறித்ததாகும். இதிலிருந்துதான் கண்டி (Candy) என்னும் ஆங்கிலப்பதம் தோன்றியிருக்க வேண்டும்.

கரும்பின் உற்பத்தியைப் பற்றி ஒரு புராணக்கதை உண்டு. இக்ஷ்வாகுவம்சத்தரசனான திரிசங்கு, விசுவாமித்திர மகரிஷியைக் குருவாகக் கொண்டு அவரை மகா பக்தியுடனும், சிரத்தையுடனும் வழிபாடு செய்துவந்தான். அரசனுடைய குணாதிசயங்களையும், நியமநிஷ்டைகளையும் கண்டு மகிழ்ந்த விசுவாமித்திரர் அவனுக்கு வேண்டிய வரமளிப்பதாகக் கூறினார். அரசன் தன் பூத உடலுடன் ஸ்வர்க்கமாகிய இந்திரலோகம் செல்வதற்குத் தனக்கு விருப்பமென்று வெளியிட்டான். விசுவாமித்திரரும் அதற்கிணங்க அனுக்கிரகம் செய்தார், ஆகாய மார்க்கமாய் பூமியிலிருந்து திரிசங்கு இந்திரலோகத்தை நோக்கிப் புறப்பட்டான். விஷயமறிந்த இந்திரனும் மற்றத் தேவர்களும் கோபமுண்டனர். கேவலம் ஓர் மானிடன் தன் உடலுடன் அங்கு வருவது அவர்களுக்கு இஷ்டமில்லை. திரிசங்கு சுவர்க்க வாசலையடைந்ததும் அங்கு கூடியிருந்த தேவர்கள் அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டார்கள். திரிசங்கு தலைகுப்புற அந்தரத்தில் விழ ஆரம்பித்தான். உடனே தன் தபோ பலத்தினால் விசுவாமித்திரர் அவன் விழுவதை நிறுத்தி அவ்விடத்திலேயே இன்னுமொரு சுவர்க்கத்தை நிர்மாணித்துவிட்டார். இந்திரலோகம் போலவே அதை அமைத்தார். அத்துடன் திருப்தியடையாமல் இந்திரலோகத்திலேயே கண்டிராத ஓர் அபூர்வ தாவரத்தையும் உண்டாக்கினார், அதுதான் கரும்பு. விசுவாமித்திரர் காலம் 4000 வருடங்களுக்கு முன்பு என்று சொல்லப்படுகிறது. புராணக் கதையில் உண்மையிருக்குமானால் கரும்பு தோன்றி அத்தனை வருடங்கள் ஆகியிருக்க வேண்டும். இப்புராணக் கதையைத் தவிர வேறு கதைகளிலும் கரும்பைப் பற்றிக் குறிப்புகள் தென்படுகின்றன. பஞ்சபாணமாகிய மன்மதன் தன் மலர்க்கணைகளை விடுவிக்க உபயோகித்த வில் கரும்பு வில்லே.

இந்தியாவிலிருந்து கரும்பும், கரும்புச் சாகுபடியும் அடுத்தபடியாகச் சீன தேசத்திற்குச் சென்றதாகத் தெரியவருகிறது. கிடைத்துள்ள சில ஆதாரங்களைக் கொண்டு இது கிட்டத்தட்ட கி.மு 750ல், அதாவது 2700 வருடங்களுக்கு முன் சாகுபடி மட்டுமல்ல வெல்லம் தயாரிக்கும் முறையையும் இந்தியாவிலிருந்துதான் சீனர்கள் கற்றுக் கொண்டார்கள்.

அக்காலத்தில் கப்பலில் [illegible] ஜனங்கள் தங்கள் பிரயாணத்தின்போது உபயோகிப்பதற்கு கரும்புச் சுமைகளை ஏற்றிச் சென்றார்கள். அதன் சாறு தாகசாந்தியளிப்பதுடன் சோர்வையும் நீக்க உதவியது இம்மாதிரிப் பிரயாணிகளின் மூலம் இந்தியாவிலிருந்து கரும்பு பிலிப்பைன், சாவகம், ஹவாய் முதலிய தீவுகளை அடைந்து அங்கெல்லாம் பயிராக்கப்பட்டது. இது கிறிஸ்து சகாப்தம் ஆரம்பத்தில் நேர்ந்தது.

கிழக்கே சென்ற கரும்பு மேற்குத் திசையிலும் யாத்திரையைத் தொடங்கியது. மகா அலெக்ஸாண்டர் படையெடுப்பின் போது வந்த ஒரு கிரேக்க தளகர்த்தர் எழுதி வைத்ததிலிருந்து கரும்பு அக்காலத்திலேயே இந்தியாவில் வளர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. பாரசீகத்திற்கு முதலில் பரவியது. இது சுமார் 600 கி பி ஆண்டில். இக்காலத்திலிருந்து அதன் வரலாற்றைப்பற்றி ஆதாரமான சரித்திரக் குறிப்புகள் உள. இப்பொழுது ஈராக் என்று சொல்லப்படும் தேசத்தில் யூப்ரடீஸ் என்னும் நதியில் முகத்துவாரத்தில் கொண்டிஷாபூர் என்னும் நகரத்தில் கி பி 600ல் வெள்ளைச் சர்க்கரை உற்பத்திச்சாலை உலக சரித்திரத்தில் முதன் முதலாய் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சாலையை ஆரம்பித்து நடத்தியவர்கள் ஒரு சந்நியாசி மடத்தைச் சேர்ந்த மக்கள்.

பாக்தாது நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டு சாம்ராஜ்யம் நடத்திய காலிஃபுகள் காலத்தில் விவசாய வளர்ச்சி சிறப்பாயிருந்தது. இம்மன்னர்கள் ஆதரவால் கரும்புப் பயிர்சியும் சர்க்கரைத் தொழிலும் உச்சநிலையை அடைந்தது. பின்பு அத்தேசத்து மக்கள் உற்சாகத்தின் பேரில் மத்தியதரைக்கடல் பிரதேசங்களுக்கு கரும்பு பரவ ஆரம்பித்தது. ஐரோப்பாவில் ஸ்பெயின் வரையிலும், ஆப்பிரிக்காவரையில் டியூனிஸ் வரையிலும் கரும்புப் பயிர்சியும் சர்க்கரைத் தொழிலும் வளர்ந்து கொண்டே வந்தது. இது 12, 13, 14-ம் நூற்றுண்டுகளில் அக்காலத்தில் இத்தாலி தேசத்திலுள்ள வெனிஸ் நகரம், சர்க்கரை வியாபாரத்திற்கு உலகப் பிரசித்தி பெற்ற சர்க்கரை உலகிற்கு ஒரு மையமாகத் திகழ்ந்தது. கி பி 15ஆம் நூற்றுண்டில் போர்த்துக்கல், ஸ்பெயின் மக்களால் ஆப்பிரிக்காவிற்கு அருகாமையிலுள்ள மடீரா, கானரீஸ், கேப்வர்டே என்னும் தீவுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததின் தொடர்பாக கரும்பு புது உலகிற்கும் சென்றது. அமெரிக்காவில் சீக்கிரம் குடிகொண்டு அந்நாட்டுச் செல்வாக்கை உயர்த்த உதவியது. அமெரிக்காவில் கரும்பின் மகசூல் அவ்வளவு அதிகமில்லை. தற்காலத்திலே கூட ஓர் ஏக்கராவிற்கு இருபது இருபத்தைந்து டன்கள்தான் கிடைக்கிறது. ஆனால் 17, 18, 19ம் நூற்றுண்டுகளில் கரும்பைப் பயிர்செய்த அமெரிக்க வாசிகளுக்குப் பிற நாடுகளில் இல்லாத ஓர் அனுகூலம் ஏற்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)


# மிளகாய் செய்கை

மிளகாய் ஒரு பெரும் வருவாயைத் தரும் உபபொருள். பின்வரும் குறிப்புகளை கைப்பற்றினால் அதிக பணலாபம் பெறலாம்.

விதைக்கு முன் — விதைகளை செரசான் ஈர பங்கசு நாசினியில் பரிகரித்தல் வேண்டும்.

குருமண் நோயைக் கட்டுப்படுத்த 1½ அவுன்ஸ் பொலித்தியோன் 100% (பெனிற்றோதயோன்) உடன்


3 அவுன்ஸ் பேயர் கெந்தகம் 80%- 6 கலன் நீரில் கலந்து

அல்லது

1½ அவுன்ஸ் பொலித்தியோன் 50 % (பெனிற்றோதயோன்) உடன்

1-1/2 அவுன்ஸ் பேயர் கெந்தகம் 80% 3 கலன் நீரில் கலந்து இரு வாரத்துக்கு ஒரு முறை மிளகாய் மரங்கள் நன்கு நனையும் வண்ணம் தெளித்தல் வேண்டும்.

மெற்றசிஸ்டொக்ஸ் "ஆர்" கிருமிநாசினியும் 1 அவுன்ஸ் 5 கலன் நீரில் கலந்து இடைவேளையில் பாவித்தல் நலம்.



மிளகாய் உறை துளை புழு, (பொட் போறர்) மிளகாயை அரித்தால். தமறேன் எல். சி. 60%-1 அவுன்ஸ் 4-6 கலன்நீரில் கலந்து அல்லது பேருசில் ஈ.சி. 25%- 1 அவுன்ஸ் 3 கலன் நீரில் கலந்து மரங்கள் நன்கு நனையும் வண்ணம் தெளித்தல் வேண்டும்.

செத்தல் மிளகாயில் வெள்ளைப் பூஞ்சன நோய் (அந்திரக்நோஸ்) வராது தடுக்க, மழை காலத்திலோ அல்லது மற்றும் நாசினி பாவிக்கும்பொழுது அன்றக்கோல் அல்லது குப்ருவிற் 1 அவுன்ஸ் - 2 கலன் நீர் வீதம் கலந்து தெளித்தல் வேண்டும்.

பொலிடோல் ஈ 605 பரத்தயன் 50 டெரக்கர், மொறஸ்ரான் ஆகிய கிருமி நாசினிகளும் பாவிக்கலாம்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

ஹேகெம் லிமிட்டெட், 400, டீன்ஸ் வீதி கொழும்பு-10.

# கரும்பின் வரலாறு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கரும்பு வளர்ச்சியிலிடும் செலவை அமோகமாய்க் குறைக்கும் வாய்ப்பு அவர்களுக்கு உண்டாயிற்று. இயந்திர உதவியினாலல்ல. சமீபகாலத்தில்தான் விவசாயத்தில் இயந்திரங்கள் உபயோகம் வருகிறது. அமெரிக்காவில் கரும்புச் சாகுபடியின் செலவைக் குறைக்க வேறு காரணம் உண்டு. அந்நூற்றாண்டுகளில் ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோ ஜாதியினரை அடிமைகளாக விலைக்கு வாங்கி, அமெரிக்காவிற்குக் கொணர்ந்து தங்கள் வீடு, தோட்ட வேலைகளையெல்லாம் செய்ய அமர்த்திக் கொள்வது சகஜமாயிருந்தது. விவசாயப் பணிகளுக்கும் இவ்வடிமைகள் உபயோகப்படுத்தப்பட்டார்கள். அடிமை உழைப்பைவிட மலிவானதேது? அடிமைகள் ஒருமனப்பான்மை அமெரிக்க சமூகத்திலேயே வேரூன்றி ஆபிரகாம் லிங்கனுடைய விடாமுயற்சிகளால் அடிமை வியாபாரம் சட்டரீதியாக நீக்கப்பட்டது. அடிமை உழைப்பின் அனுகூலத்தால் அமெரிக்க கரும்பு விவசாயிகளும், சர்க்கரைத் தொழிலதிபர்களும் கொழுத்த இலாபம் சம்பாதித்தார்கள். மற்ற நாட்டினர் இவர்களுடன் போட்டியிட முடியவில்லை. வெனிஸின் முக்கியத்துவம் குன்ற ஆரம்பித்தது. கொஞ்சங்கொஞ்சமாகச் சர்க்கரை வியாபாரத்தின் பிரதம ஸ்தானம் மேற்கிலுள்ள அமெரிக்கர்களால் கைப்பற்றப்பட்டது.

இப்படியாக இந்தியாவில் நாலாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய கரும்பு கிழக்கிலும் மேற்கிலும் பரவி, வெப்ப மண்டல தேசங்களில் பயிர் செய்யப்பட்டு பூமிக்கே ஓர் அரைக்கச்சை போல அமைந்துவிட்டது. இந்நாளில் உலகில் கரும்புச் சாகுபடியில் முன்னணியில் நிற்கும் தேசங்கள் பின்வருமாறு: இந்தியா, தென் சீனா, தைவான், பிலிப்பைன், ஹாவாய், இந்தோனேஷியா-இவைகளெல்லாம் ஆசிய கண்டத்திலுள்ளவை. மத்திய அமெரிக்க ஐக்கிய தேசத்தின் சில மாநிலங்கள், கயானா, ப்ரேஸில், பிஜி, பெரு, க்யூபா, மேற்கு இந்தியத் தீவுகள் இவைகளெல்லாம் வட, தென் அமெரிக்காவைச் சேர்ந்தவை. எகிப்து தென் ஆபிரிக்கா, மோரீஸ் தீவு இவைகள் ஆப்பிரிக்க பிரதேசங்கள் ஆஸ்திரேலியாவிற்கும் 18-ம் நூற்றாண்டில் பரவி க்வின்ஸ்லாண்டு மாநிலத்தில் முக்கிய பயிராய்த் திகழ்கிறது.

தற்போதைய மதிப்பின்படி உலகின் சர்க்கரை உற்பத்தி 3 கோடி 60 லட்சம் டன்களாகும்! இதற்றில் மூன்றில் இரண்டு பங்கு அதாவது 2 கோடி 40 லட்சம் டன்கள் கரும்பிலிருந்து கிடைக்கிறது. மீதி 1 கோடி 20 லட்சம் டன்கள் பீட்ரூட்டிலிருந்து தயார்செய்யப்படுகிறது. இவ்விரண்டு பயிர்களும் ஸுக்ரோஸ் என்னும் சர்க்கரையைக் கொடுக்கக் கூடியவை என்றாலும், இரண்டிற்கும் வெவ்வேறு சீதோஷ்ண நிலை வேண்டியிருக்கிறது. பீட்ரூட் மட்டான வெப்பமுடைய நாடுகளில்தான் வளர்கின்றது. இந்நாடுகளில்தான் வளர்கின்றது. இந்நாடுகளில் விவசாயம் இப்பொழுதே தீவிரமாக நடைபெற்று வருவதால் பீட்ரூட் பயிரின் விஸ்தீரணத்தை அதிகரிக்க அதிக வாய்ப்பு இல்லை. கரும்பு

(9-ம் பக்கம் பார்க்க)





குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டர்ஹோண்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்



எல்லோருக்கும் எமது அன்புகலந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

உங்களுக்குத் தேவையான எல்லா விதமான

'பேக்கின்ஸ்' உதிரிப்பாகங்கள்

'ஜோன்சன்ஸ்' உதிரிப்பாகங்கள்

யாவும்

நிதானமான விலைகளில் எம்மிடம் கிடைக்கும்.



உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு தீர்மான

★ இரும்புச் சாமான்கள்

★ பெயின்ட் வகைகள்

★ அஸ்பெஸ்டஸ் சீற் வகைகள்

★ மர வகைகள்

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விஷ்ணு ஹாட்வெயர்ஸ்ரோஸ்

57, யாழ்ப்பாணம் வீதி, வல்வெட்டித்துறை.
போன்: 34 தந்தி: 'சிற்றம்பலம்'

இந்திய-பாகிஸ்தான் போர்

# மேற்காசியப் போர் தாமதத்திற்குக் காரணம்

## எகிப்திய ஜனாதிபதி கூறுகிறார்

கெய்ரோ, ஜன. 14 இந்திய உப கண்டத்தில் யுத்தம் ஏற்பட்டதினாலேயே சூயஸ் கால்வாய்ப் பகுதியிலிருந்த தனது படைகளுக்கு எவ்வித போர்ச் செயலிலும் ஈடுபடவேண்டாமெனத் தாம் உத்தரவிட்டதாக எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

கெய்ரோ வானொலியில் உரை நிகழ்த்திய திரு. சதாத், மேலும் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட தனது நோக்கிலை அடுத்து மேற்காசியாவில் தனது கவனத்தை அமெரிக்கா இப்பொழுது செலுத்தத் தொடங்கியுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் ஈடுபட்டிருந்ததினால் 1971ம் ஆண்டுக்குள் இழந்த அரபுப் பிரதேசத்தை மீட்பது என்ற எனது குறிக்கோளை நடைமுறைப்படுத்த முடியாமற் போய்விட்டது என்றார்.

### உழவர்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களேயாகும் என்றும் மிகையாகாது. உழவர் பெருமக்களின் எழுச்சி விழாவான பொங்கற் பண்டிகையைக் கொண்டாடுவதனால் எமது சமுதாயம் முன்னேற ஏதுவாகின்றது. தமிழ் கூறும் நல்லுலகு எங்கணுமுள்ள இந்துக்கள் கொண்டாடும் இவ்விழாவில் நாமனைவரும் ஆர்வத்துடன் பங்குபற்றி மகிழ்ச்சி கொள்வோம்.

பங்களாதேஷை

# அவசரப்பட்டு அங்கீகரிக்கக் கூடாதாம்

ராவல்பிண்டி, ஜன 14 பங்களாதேஷை உலகநாடுகள் அவசரப்பட்டு அங்கீகரிக்கக் கூடாதென பாகிஸ்தான் ஜனாதிபதி சுல்பிகார் அலிபூட்டோ கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் அவர் பங்களாதேஷ் என்று சொல்லப்படும் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியத் துருப்புக்கள் வெளியேறும்வரை முஜிபுருடன் பேச்சுவார்த்தை நடத்துவது தம்மால் முடியாத காரியம் என்றார்.

......

## ஆதீனத்திற்கும் விஜயம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரும் லைச்சார அமைச்சர் திரு எஸ் எஸ் குலத்திலக நாளை மாலை 6 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கும் விஜயம் செய்து விசேஷ பூசையில் கலந்து கொண்டு உரையாற்றுவார். உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளை அமைச்சரை வரவேற்றுப் பேசுவார்.

### கரும்பின்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வெப்பமண்டல நாடுகளில் நன்கு வளரும். வெப்பமண்டலத்தில் இன்னும் அநேக நாடுகளில் சாகுபடிக்கேற்ற நிலங்களெல்லாம் தரிசாய்க்கிடக்கின்றன. இங்கெல்லாம் கரும்பு சாகுபடி விஸ்தரிக்கச் சாதக நிலைமையுண்டு. வருங்காலத்தில் உலகின் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். தற்போதைய உற்பத்தி மக்களின் தேவைக்குப் போதாமல் இருக்கிறது. இன்றும் சர்க்கரை என்னும் பண்டம் விலையுயர்ந்ததாகவும், செல்வந்தர்களிடையே தாராளமாய் புழங்கும் நிலையிலுள்ளதாகவும்இருக்கிறது. இதுதிருப்திகரமான நிலையில்லை. இவ்வுணவுப் பொருள் மனித வாழ்க்கைக்கு மிக அவசியமானது. ஆரோக்கியம், வேலை செய்ய சக்தி இவை அளிக்க சர்க்கரைக்கு மிஞ்சினது எதுவுமில்லை. உலகமக்கள் அனைவரும் தடையின்றி அடையக்கூடிய விலையில் அதுகிடைக்கவேண்டிய நிலைமை ஏற்படவேண்டும்.

(நன்றி—"கரும்பு")

# கானாவில் சகல அரசியல் கட்சிகளுக்கும் தடை

ஆக்ரா, ஜன. 14 கானாவில் இராணுவப் புரட்சி ஏற்பட்டதை அடுத்து அங்கு நாட்டின் அரசியல் சாசனம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. பார்லிமெண்ட் கலைக்கப்பட்டதோடு நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

லெப்டினண்ட் கேர்ணல் ஆச்சம் பொங் தலைமையில் இராணுவ அதிகாரிகளும் சிவிலியன் தலைவர்களும் சேர்ந்தே ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர்.

கானாவின் பிரதமர் டாக்டர் பூஷியா, நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டுக்கும், தவறான வழிநடத்தலுக்கும் காரணமாக இருந்தாரென லெப்டினண்ட் கேர்ணல் ஆச்சம் பொங் குற்றஞ்சாட்டியுள்ளார். பிரதமர் பூஷியா பதவிநீக்கஞ்செய்யப்பட்டுள்ளார்.

லண்டனில் சிகிச்சை பெற்றுவரும் டாக்டர் பூஷியா, இப்புரட்சி பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இராணுவத்திலுள்ள ஒருசில அதிகாரிகளே இப்புரட்சியைச் செய்துள்ளனர். ஆனால் நாட்டிலுள்ள மக்கள் ஜனநாயகத்தை நிலைநிறுத்த உழைப்பார்கள் என்று தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

—

உதைபந்தாட்டம்

## கண்டி—யாழ் நாளை மோதுகின்றன

யாழ்ப்பாணம், சனி

யாழ். உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்கும், கண்டி மாவட்ட உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில், நாளை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில், 2வது சுற்று உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும்.

மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில் கடந்த கிழமை கண்டியில் நடைபெற்ற 1வது சுற்றுப்போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 3 கோல்களைப் போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ். தெரிவுக் கோஷ்டிக்கு இலங்கை உதைபந்தாட்ட வீரர் எம். பிரான்சிஸும், கண்டிக்கோஷ்டிக்கு வீரர் எஸ். செல்லரட்ணமும் தலைமைதாங்குகின்றனர்.

(தே. நி)

கிரிக்கெட்

## யாழ். கோஷ்டிகள் நாளை மோதுகின்றன

யாழ்ப்பாணம், சனி

இலங்கைக்கு தற்போது விஜயம் செய்திருக்கும் அவுஸ்திரேலிய பாடசாலை மாணவர் கிரிக்கெட் தெரிவுக் கோஷ்டியுடன் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் மோதவிருக்கின்றது.

இந்தப்போட்டியில் மோதுவதற்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்காக, யாழ். கிரிக்கெட்சங்கத் தெரிவுக் கோஷ்டியுடன், வடமாகாண பாடசாலை தெரிவுக்கோஷ்டி நாளை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் போட்டியிடுகின்றது.

வடமாகாண பாடசாலை தெரிவுக் கோஷ்டிக்கு வீரர் ரி. தேவபாலனும், யாழ். கிரிக்கெட் சங்கத் தெரிவுக் கோஷ்டிக்கு வீரர் கே. எஸ். ஈ. சேவியரும் தலைமை தாங்குகின்றனர். (தே. நி)


# புதுமைப் பொங்கல்!

ஜனவரி 15-ம் நாள் கொண்டாடும்




புதுமைப் பொங்கலன்று திகதி பெரிய இலக்கத்தில்

புதுமையாக வெளிவந்த

## லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

உங்கள் இல்லங்களை அலங்கரித்து என்றென்றும் பொங்கவாழ்த்துகின்றோம்

வடமாகாணத்தில் லீலா தயாரிப்புகளை விற்கும் அன்பர்கள் பற்றாக்குறை ஏற்பட்டால்

தயவு செய்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி செ. ஆ. செ. அன் கோ தாபனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

# லீலா

அங்கு நாம் நியமித்த சகல சலுகைகளுடன் கமிஷன் கழித்து பெற்றுக்கொள்ளலாம்.



## Cockroaches?



BAYGON wipes out pests!

BAYER

பேகோன்

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு.






எமது சோப் பாவனையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் எமது உளம்நிறைந்த

பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்

என்றும் தூய்மையான சலவை செய்வதற்கு

சில்வர் வைற் நீலசோப். பார்சோப் வாங்கி சலவை செய்யுங்கள்

தயாரிப்பாளர்: **கலா இன்டஸ்றீஸ்**

கோண்டாவில் — யாழ்ப்பாணம்.



## எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

உங்கள் இல்லங்களில்

மின்சார பல்புகள் அடிக்கடி பழுதடைகின்றனவா? நீடித்து உழைக்கவும், மின்சாரம் குறைவான இடங்களில் பாவிக்கவும், நீங்கள் படிக்கும்போது உங்கள் கண்களை பாதிக்காமல் இருக்கவும் உகந்த, சக்திவாய்ந்த

C. B. E. மின்சார பல்புகளைக் கேட்டு வாங்குங்கள்

வடபகுதியில் விற்பனை ஏஜண்டுகள் தேவை: விண்ணப்பித்து உங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

# நியூ ரோன் எலெக்றிக்கல்ஸ்

ஸ்ரான்லி றோட், (போன்: 7016) யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு [15-1-72] சனிக்கிழமை ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறை. ஆனாலும் 16-1-72 ஞாயிற்றுக்கிழமை "ஈழநாடு" வாரமலர் வழமைபோல் வாசகர்களுக்குக் கிடைக்கும்.

### மணிவாக்கு

நமக்குள்ள வேலைகளை சரிவரச் செய்யாமல் ஓடிவிடக் கூடாது. அவை தெய்வம் அளித்தவை பணிகள். இதுவே கீதையின் உபதேசம். "என் விருப்பமல்ல. உன் விருப்பப்படியே நடக்கும்" என்ற மனப்பான்மையுடன் காரியங்களைச் செய்யின் அச் செயற்கையிலேயே இன்பம் காணலாம். வேலையே வழிபாடாகும். — சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna Telephone: 389

சனிக்கிழமை விரோதிகிருது வருஷம் தை மாதம் 1-ந் திகதி (15-1-72)

## பொங்கல் வாழ்த்து

சில வருடங்களுக்கு முன்பாக ராஜாஜி அவர்கள் ஈழத்தில் ஒரு பத்திரிகைக்கு அனுப்பியிருந்த தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஒரு நல்ல யோசனை கூறியிருந்தார். 'பொங்கல்பானையில் அரிசியும் பருப்பும் சேர்த்து பொங்கி பொங்கலுக்கு நல்ல ருசி அளிக்கின்றன. என்றாலும் இரண்டும் தனி ருசியுடனேயே இருக்கும். அதேபோல இலங்கை அரசியல் பொங்கல்பானையில் சிங்கள அரிசியும் தமிழ்ப் பருப்பும் சேர்ந்து பொங்கினாலும் இரண்டின் தனி ருசியும் கெடாமல் பொங்கலை சிறப்பிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

புதிய அரசியல் அமைப்பு தயாரிக்கப்படும் இம்முக்கியமான சமயத்தில் இலங்கைப் பொதுமக்களின் பிரதிநிதிகளிடையே பூரண ஒத்துழைப்பும் தாராள மனப்பான்மையும் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை அறிவுறுத்தத் தேவையில்லை. தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒருசாரினர் ஒத்துழைக்க மறுத்து ஒதுங்கியுள்ளனர். மொழி உரிமைபற்றிய விஷயமே இதற்குக் காரணமாகும். மொழி உரிமை தமிழ்ச்சமூகத்தின் மானத்தைப்பற்றிய தாகையால் அதுபற்றிய அவர்களது உணர்ச்சிகளை அலட்சியம் செய்வதற்கில்லை. ஈழத்தின் அரசியல் பொங்கலுக்கு 'சிங்கள அரிசி' எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் 'தமிழ்ப்பருப்பு' ஆகும்.

ஏற்கெனவே இந்த அரசியலில் எல்லா முக்கிய கட்சிகளும், தமிழையும் சிங்களத்தையும் இரு அரசாங்க மொழிகளாக ஒப்புக்கொண்டு, பல வருடகாலம் அப்படியே நடத்தியும் வந்தனர். பத்து வருடகாலம் நடத்திய பின், தமிழ் மொழியை ஒதுக்கி, ஒருசில பெரும்பான்மை வாக்குகளைச் சுட்டும் செய்தபின், நாட்டின் ஒற்றுமை குலைந்து, வகுப்புவாத கிளர்ச்சிகள் தலைதூக்கி நாடு முன்னேற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றது. மொழி விஷயம் கேவலம் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கக் கூடியதன்று. ஏற்கெனவே தமிழுக்கு இருந்து வந்த ஓர் உரிமையையும் அந்தஸ்தையும் பறிக்க வேண்டிய நியாயமென்ன? அந்த இழைக்கப் பட்ட தவறினால் நாட்டுக்குப் பெரும் பாதகம் ஏற்பட்டுள்ளதால் அதைத் திருத்திக் கொள்ள வேண்டாமா?

பன்னாட்டைத் தேசத்தைப் போல இலங்கையிலும் தமிழ்ப் பகுதியைப் பிரிக்க வேண்டுமென்று ஒரு தமிழ்த் தலைவர் கூறியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. இது உண்மையானாலும் அவ்வித யோசனை நாட்டுக்கு மட்டுமன்றி, தமிழ்ச் சமூகத்துக்கும் பெரும் தீங்காக முடியும். பன்னாடு தேசப் பிரச்னைக்கும் இலங்கைத் தமிழ் சமூக விஷயத்துக்கும் பெரும் வித்தியாசமுண்டு. பாகிஸ்தானின் இருபகுதிகளுக்குமிடையே ஆயிரத்து இருநூறு மைல்கள் தூரமிருந்தது. மேலும் ஒருகோடி மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குத் துரத்தப்பட்டதாலேயே மிகவும் தயக்கத்துடன் இந்தியா தலையிட்டது. இலங்கையில் அவ்விதநிலை ஒருக்காலும் ஏற்படச் செய்வதுடன் ஒரு சிறிய தீவிலுள்ள தம் விஷயத்தில் அப்படி வெளியார் யாரும் தலையிடுவரென்று எதிர்பார்ப்பதற்குமில்லை.

வழமைய அனுபவங்களும் உலகில் நடைபெற்றுவரும் சம்பவங்களும் நமக்கு நல்லதோர் பாடமும் எச்சரிக்கையுமாகும். ஒரு சமூகத்தின் மானத்தைப்பற்றிய விஷயத்தில், பெரும்பான்மை சமூகத் தலைவர்கள் மேலான அரசியல் ஞானத்துடனும், தேசாபிமானத்துடனும் நடந்துகொண்டாலே இந்நாட்டின் எதிர்காலம் மேலான முறையில் அமைதியாக முன்னேறமுடியும். இலங்கையிலே புதிய அரசியல் பொங்கப்படும் இம்முக்கிய வேளையில் இரு சமூகத் தலைவர்களிடையேயும் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் நிலவி, நமது அரசியல் பொங்கல் நல்லருசியாக அமைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து எல்லாருக்கும் நமது மனம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## சினிமாப்பட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகர்களுக்கு டெமி ஜெயவர்த்தனவின் தலைமையிலேயே பூரண ஆதரவும் தேர்தல் பிரசாரத்திற்கு உறுதுணையும் அளித்து வந்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக தகவல் டைரக்டர் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் மாதிபர், கலாச்சார விவகார டைரக்டர் ஆகிய மூவரும் டைரக்டர்களாக நியமிக்கப்படுவார்கள்.

பங்காளி சமூகங்களில் இருந்தும் இருவர் டைரக்டர்களாக நியமிக்கப்படுவார்கள். இதற்குரிய டைரக்டர்களின் பெயர்ப்பட்டியலை இறுதியாக அங்கீகரிக்கும் பொறுப்பை பிரதமர் திருமதி பண்டாரநாயகா தாமே ஏற்றுக்கொண்டிருக்கிறார் என தெரிகிறது.

## யாழ். —

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டக் கூடாது. இவ்வகையில் அவர்களை அறிவுறுத்துவது மட்டும் மன்றமாது அவர்களோடு நெருங்கிப்பழகி, சேவையில் ஊழல் நுழைவதற்கான காரண காரியங்களை அறிந்து அவற்றைக் களையவேண்டும். இந்தவகையில் மாநகரபணியாளர்களுக்கும், வரியிறுப்பாளர்களுக்கும் இடையில் தோழமை ஏற்படுத்துவதில் மாநகரசபை முதல்வரும் சக உறுப்பினர்களும் ஒரு இணைப்புப் பாலமாக அமைய வேண்டும். அதன் பொருட்டு பணியாளர்களுடனும் மாநகர உறுப்பினர்களுடனும் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு உண்டாக்கி வருட முடிவில் ஒரு தேநீர் விருந்துக்கு ஒழுங்கு செய்தன்வேன்.

வரியிறுப்பாளர்களே எமது எசமானர் என்று பணியாளரும், பணிசெய்து கிடப்பதே கடன் என்று மாநகர உறுப்பினர்களும் பொறுப்புடன் காரியம் ஆற்றத்தலைப்படும் போது நகரை அழகாபுரியாக்கும் எம்முயற்சி இலகுவாகிவிடும். மீண்டும் உங்களுக்கு எமது பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## நல்லூர் எம்.பி பொங்கல் வாழ்த்து

"நாம் வளம்பெற வேண்டும். நாடு வளம்பெற வேண்டும். மக்கள் சுபிட்சமான வாழ்வு வாழ வேண்டும்".

நல்லூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்க் காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுத் தலைவருமான திரு சி. அருளம்பலம் தனது பொங்கல் தினச் செய்தியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தனது செய்தியில் கூறியிருப்பதாவது.

நமது நாடு சுதந்திரம் அடைந்து கால்நூற்றாண்டுக்குப் பின் தனித்துவம் வாய்ந்த சுபிட்சத்துக்கு வழி தேடிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் மேலும் வெளிநாடுகளில் தமக்குத்தேவையான உணவுப் பொருட்களுக்கு கையேந்தி நிற்கும் நிலைமாறி நமக்குத் நாமே உணவுப்பொருட்களை உற்பத்திசெய்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

## இந்தியாவுடன் பேச பூட்டோ தயார்

லாகூர், ஜன. 14

பாகிஸ்தான் இந்தியப் போரின்போது இரு பகுதியினராலும் கைதுசெய்யப்பட்ட துருப்புக்களைப் பரிமாறிக்கொள்வது பற்றி இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ தெரிவித்துள்ளார்.

## திருமணத்துக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் அளிக்கும் இறுதிப் பரிசு என்றும் சொல்லி ஒரு 'டொபி'யைக் கையில் வைத்தவுடன் அப்படியே மயங்கி விழுந்துவிட்டார் என்றும் தெரிவித்தார்.

தனது திருமணத்திற்குச் செலவுசெய்ய போதியளவு பணமில்லையே என்ற கவலையே விமலசேனாவைத் தற்கொலைசெய்யும்படி தூண்டியிருக்கிறதென விமலசேனாவின் சகோதரி குணவதி சாட்சியமளிக்கையில் கூறினார்.

தற்கொலையென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## உதவி மேயர் செய்தி

குருநகர், வெள்ளி

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பொலிவுடன் திகழ தமிழ்மக்கள் உள்ளமெல்லாம் பொங்க, நெற்றி வியர்வை சிந்தி உழைக்கும் விவசாய, தொழிலாள மக்கள் உள்ளம் குளிர ஒவ்வொருவரது இல்லம் தோறும் இத் திருநாளில் இன்பம் பொங்க, அன்பு பொங்க, சமாதானம் பொங்க, வெற்றிக்கீதங்கள் பொங்க வேண்டும் என்று யாழ். மாநகரசபை உதவி மேயர் திரு. துரைராஜசிங்கம் தனது பொங்கல் வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

## பொங்கல் பரிசு

யாழ்ப்பாணம், சனி

வண்ணை வைத்தீஸ்வரன் பஜனைச் சபையினரால் மார்கழிமாதம் முழுவதும் நடாத்தப்பட்ட பஜனை நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய சுமார் 200 மாணவ மாணவிகளுக்கு இன்று பொங்கல் தினத்தன்று மாலை 5 மணி முதல் பஜனை பூர்த்திவிழாவின் பின்னர் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. மின்வைத்திய தாபன அதிபர் திரு க. கனகராசா, வேல்வராவித்தாபன அதிபர் திரு. க. சுந்தரம்பிள்ளை மற்றும் பலர் இந்தப் பரிசுகளை வழங்கவுள்ளனர்.

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், சனி

தென்மராட்சியில் வருடாவருடம் நடைபெறுவது போல் இன்றும் மாட்டுவண்டிச்சவாரியும் பொங்கல் விழாவும் நடைபெறும்.

## சேர். இராமநாதன் வரலாற்று நூல்

யாழ்ப்பாணம், சனி

திரு மு. வைத்திலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற சேர் பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டுவிழா இன்று மாலை 5 மணிக்கு யாழ் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

விழா மண்டபத்தில் நூல் பெற விரும்புகிறவர்களுக்கு விசேஷச் சலுகையுடன் ரூபா 25க்கு நூலை விற்பனை செய்ய வெளியீட்டுச் சபையினர் முடிவு செய்துள்ளனர்.

## கூப்பன் யாருடையது?

பரந்தன் சந்தியில் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் புத்தகம் ஒன்று முல்லைத்தீவு தேவிபுரத்தைச் சேர்ந்த ஐ. வைகராஜா என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## தெல்லிப்பழையில் இன்று உழவர்விழா: இரசிகமணிக்கு விருது

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பழை அம்பனை கலைப்பெருமன்றம் நான்காவதாண்டு உழவர் விழாவை இன்று கொண்டாடுகிறது. மகாஜனக்கல்லூரியில் இலங்கையர்கோன் அரங்கில் இன்று மாலை கல்லூரி அதிபர் திரு. பொ. மகாதேவன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவை முன்னாள் அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

கலாநிதி கா. சிவத்தம்பி, திரு. ஆ. அமிர்தலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை தலைமையில் கவியரங்கும், சங்கீதபூஷணம் திருமதி நேசபூபதி நாகராஜனின் இன்னிசைக் கச்சேரியும், நாடகமும் விழாவில் இடம்பெறும். விழாவையொட்டி விசேஷ மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இரசிகமணி இலக்கியச் செல்வரானார்

ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் தமிழ்த் தொண்டு ஆற்றிவரும் இரசிகமணி கனக.செந்திநாதனின் இலக்கியப் பணியைப் பாராட்டி மன்றம் விருது வழங்குகின்றது. விழாவின் முக்கிய அம்சமாக விளங்கும் இவ்வைபவத்தில் மன்றச் சார்பில் சித்தாந்த சாகரம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இரசிகமணிக்கு 'இலக்கியச் செல்வர்' என்ற விருதை வழங்கி உரையாற்றுவார். பண்டிதர் க. சச்சிதானந்தன், திரு. ச. விநாயகரத்தினம், திரு. ஆ. சிவநேசச்செல்வன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

இரசிகமணி கனக. செந்திநாதன் விருதுபெறுவதை முன்னிட்டு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆசியுரை அளித்துள்ளார். அதில் "இரசிகமணி கனக.செந்திநாதன் இளமைதொட்டு இலக்கியச் செல்வத்தில் முழுகித் திளைத்தவர். இனி அவருக்கு அது அமையும். இணைப்பாரிய இந்தக் காலத்திலே, தூய இலக்கியச் சுவைகளின் அன்பு செய்து தமிழ்ச் செல்வராய்த் திகழ்வாராக என்று மனமுவந்து வாழ்த்துவோமாக.

இரசிகமணிக்குப் போர்த்தும் பொன்னாடை, தூய இரசனைகளாகிய சுவைகளைப் பேணி அன்பு மயமாக்கிச் சுத்தத் தமிழாடையாய்த் திகழ்வதாக." என்று குறிப்பிட்டுள்ளார்.



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெல்கோலில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.